இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 17-10-2025

# பீகாரில் நேர்மை வேண்டும்!

இந்தியாவில் ஜனநாயகத்துக்கு மாபெரும் அச்சுறுத்தலாக இந்தியத் தேர்தல் ஆணையமே மாறி இருக்கிறது. பீகார் மாநிலத்தில் முறையாக, ஒழுங்காக, நேர்மையாக தேர்தல் நடத்த வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையத்துக்கு இருக்கிறது. ஆனால் அதைப் பற்றி எல்லாம் இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு எந்தக் கவலையும் இல்லை.

**SIR என்ற வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் மூலமாக பீகார் மக்களை பீதி அடைய வைத்துள்ளது இந்திய தேர்தல் ஆணையம். இதனை உச்சநீதிமன்றம் எத்தனை முறை கேள்வி எழுப்பினாலும் தேர்தல் ஆணையம் மந்தமாக, கண்டுகொள்ளாமல், காது கேட்காதது மாதிரியே இருக்கிறது.**

**பீகாரில் சுமார் 8 கோடி வாக்காளர்கள் உள்ளனர். SIR என்ற பெயரில் பல லட்சம் வாக்காளர்களை நீக்கியது தேர்தல் ஆணையம். பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து முதலில் 65 லட்சம் பேரைத் தேர்தல் ஆணையம் நீக்கியது. அடுத்து 3.7 லட்சம் பேரை நீக்கினார்கள். இஸ்லாமியர்கள், பட்டியல் சமூகத்தினர், பெண்கள் என்று குறிவைத்து இந்த நீக்கம் நடந்தது. இப்போது புதிதாக 21 இலட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இணைத்திருக்கிறது தேர்தல் ஆணையம். இதில் எதற்கும் முறையான பதில் கிடையாது.**

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற சிறப்பு வாக்காளர் திருத்தம் எனப்படும் வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கையைச் சார்ந்த வழக்கை அக்டோபர் 7ஆம் தேதி உச்சநீதிமன்றம் விசாரித்தது. தேர்தல் ஆணையம் பீகாரில் வெளியிட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் 3.66 லட்சம் பேர் நீக்கப்பட்டதற்கான விவரங்களை முழுமையாக அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிபதிகள் சூர்யகாந்த் மற்றும் ஜொய்மால்யா பாக்சி அடங்கிய அமர்வு இது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் விளக்கம் கோரியது.

பீகார் மாநிலத்தின் இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட 21 லட்சம் புதிய பெயர்களும், நீக்கப்பட்ட 3.66 லட்சம் பெயர்களும் எவ்வாறு மாற்றம் செய்யப் பட்டன என்பதற்கான முழு விவரங்களைச் சொல்லுங்கள் என்று நீதிமன்றம் கேட்டுள்ளது.

மூத்த வழக்கறிஞர் பிரஷாந்த் பூஷன், 'தேர்தல் சீர்திருத்த அமைப்பு' சார்பில் நீதிமன்ற விசாரணையில் பங்கெடுத்தார். **"2025 ஜனவரி மாத வாக்காளர் பட்டியலுடன், தற்போதைய இறுதி பட்டியலை ஒப்பிடும் பணியை தேர்தல் ஆணையம் ஒரே 'கிளிக்' மூலம் செய்ய முடியும். இதன் மூலம் எந்தப் பெயர்கள் சேர்க்கப்பட்டன, எந்த பெயர்கள் நீக்கப்பட்டன என்பதை தெளிவாக அறியலாம். தேர்தல் ஆணையம் செப்டம்பர் 30, 2025 அன்று பீகாருக்கான இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட்டது. அதில் மொத்தம் 7.42 கோடி பேர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இதில் 21 லட்சம் புதிய பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதே சமயம் 3.66 லட்சம் பேர் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இதைச் சொல்வது சிரமமான செயல் அல்ல"** என்று வாதிட்டார்.

பீகாரில் ஒரே தொகுதியில் 80,000 இஸ்லாமியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்க முயற்சி நடந்ததாக மூத்த வழக்கறிஞர்பிரசாந்த்பூஷன் குற்றம்சாட்டினார். பா.ஜ.க. கூட்டணியில் இருக்கும் ஒன்றிய அமைச்சர் சிராக் பாஸ்வானின் சொந்தத் தொகுதியிலேயே பட்டியல் சமூகத்தினரின் வாக்குகள் பறிக்கப்பட்டுள்ளன. அதாவது பா.ஜ.க.வுக்கு யாரெல்லாம் வாக்களிக்க மாட்டார்களோ அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது.

**"தேர்தல் ஆணையம் ஒரு அரசியல் அமைப்பாக இருப்பதால் சட்டப்படி செயல்படும் என நம்புகிறோம். அதே நேரத்தில், எந்தவிதமான சட்ட விரோதமும், பாகுபாடும் நடந்திருந்தால் அந்த நடவடிக்கையே செல்லாது என அறிவிக்கப்படும்"** என்று செப்டம்பர் 15 அன்று நடந்த விசாரணையில் உச்சநீதிமன்றம் எச்சரித்திருந்தது.

ஆனாலும் மழுப்பலான பதில்களையே தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் சொல்லி வருகிறார். "ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் வாக்காளர் பட்டியல்களைத் திருத்துவது அவசியம், பீகார் சிறப்பு தீவிர திருத்தம் சட்டப்படி நடத்தப்பட்டது. தேர்தலுக்குப் பிறகு அதை மறுபரிசீலனை செய்வது சட்டத்திற்கு முரணானது. வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கு மாவட்டத் தேர்தல் அலுவலர்தான் பொறுப்பு. பீகாரின் 243 மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் வாக்காளர்களை தணிக்கைச் செய்ய ஒன்றிணைந்து பணியாற்றினர். நீக்கப்பட்ட பெயர்களின் பட்டியல் அரசியல் கட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. வாக்காளர் பட்டியலில் யாருடைய பெயர் விடுபட்டிருந்தாலும், அவர்கள் மாவட்ட நீதிபதியிடம் மேல்முறையீடு செய்யலாம்" என்று சொல்கிறாரே தவிர உச்சநீதிமன்றத்துக்கு முறையான பதிலைத் தர மறுக்கிறார் ஞானேஷ்குமார்.

பீகாரில் பல லட்சக்கணக்கானவர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து ஏன் நீக்கினார்கள்? அதிலிருந்து சில இலட்சக்கணக்கானோரை மீண்டும் ஏன் சேர்த்தார்கள்? எந்தக் கேள்விக்கும் பதில் கிடைக்கவில்லை.

தேர்தல் ஆணையமானது இந்தியாவில் ஜனநாயகத்தை வெற்றி பெற வைக்கும் அமைப்பாக இல்லாமல் பா.ஜ.க.வை வெற்றி பெற வைக்கும் அமைப்பாக மாறிவிட்டது. பா.ஜ.க. ஆட்சியின் கீழ் பணியாற்றுவதால் இதுதான் நமது வேலை என்று தேர்தல் ஆணையர் நினைக்கிறார்.

**பீகாரில் நேர்மையான, உண்மையான தேர்தல் நடந்தால்தான் இனி எந்த மாநிலத்திலும் உண்மையான, நேர்மையான தேர்தல் நடக்கும். நடத்த முடியும்.**




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய எல்.ஈ.டி. மின்னணு திரைகள் மூலமாக நகரின் பல்வேறு பகுதிகளில் பெய்துள்ள மழையளவு விவரங்களையும், பல்வேறு கால்வாய்களில் மழை நீர் தடையின்றி செல்வதையும், நேப்பியர் பாலம் அருகில் உள்ள முகத்துவாரத்தில் நீர் தடையின்றி கடலுக்கு செல்வதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி உள்பட மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

## 2024- 25-ல் ஐ.டி. துறையில்

# ரூ.15,000 கோடி ஏற்றுமதி செய்த கோவை!

**சென்னை, அக்.17-**

**வளர்ச்சியடையும் தமிழகத்தின் 2ம் நிலை நகரங்கள் 2024-25ல் ஐ.டி துறையில் ரூ.15,000 கோடி ஏற்றுமதி செய்த கோவை: மதுரை, நெல்லை, சேலத்தில் ரூ.2300 கோடி வர்த்தகம்**

முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் முயற்சியால் 2000ம் ஆண்டு, சென்னையில் முதல் டைடல் பார்க் தரமணி பகுதியில் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றனர். சென்னையின் வளர்ச்சிக்கு டைடல் பார்க் முக்கிய பங்கு வகித்தது. இது தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஒரு முக்கிய அடித்தளமாக இருந்தது. தமிழகத்தில் ஐடி நிறுவனங்கள் கால் பதிப்பதற்கு இந்த டைடல் பார்க் தான் முக்கிய ஆதாரமாக இருந்தது. உலக அளவில் தகவல் தொழில்நுட்பத்துறையில் சென்னை போட்டியாக இன்றைக்கு இருக்கிறது என்றால் அதற்கு கலைஞரின் டைடல் பார்க் தான் காரணம். சென்னையை தொடர்ந்து, கோவையில் டைடல் பார்க் அமைந்துள்ளது. தற்போது, மதுரை, திருச்சி மற்றும் ஓசூரில் டைடல் பூங்காக்கள் முன்மொழியப்பட்டு, கட்டுமான பணிகள் நடந்து வருகிறது. இதுதவிர, கோவையில் மேலும் ஒரு புதிய டைடல் பார்க் அமைக்கும் பணியும் நடந்து வருகிறது. சென்னையை அடுத்த பட்டாபிராமிலும் டைடல் பார்க் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில், தகவல் தொழில்நுட்பத்துறையில் உலக அரங்கில் முன்னணியில் பெங்களூரு, ஐதராபாத் ஆகிய நகரங்கள் உள்ளன. குறிப்பாக, கடந்த சில ஆண்டுகளில் ஐதராபாத் ஐ.டி.துறையில் அசுர வளர்ச்சி அடைந்து உள்ளது.

இதை சுட்டிக் காட்டி பேசிய தகவல் தொழில்நுட்ப அமைச்சர் பிடிஆர், தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்தையும் ஐதராபாத் போல் மாற்றுவோம் என கூறினார். இதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. தொழில்துறையை மேம்படுத்தவும், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் கொண்டு செல்லவும் பல்வேறு பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்து வருகிறார்.

இதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகள் அதிகளவு குவிந்து வருகிறது. வேலை வாய்ப்பு அதிகரித்து வருகிறது. உலகின் முன்னணி நிறுவனங்கள் ஐடி, மோட்டார், காலணி போன்ற பல்வேறு துறைகளில் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருகிறது.

முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் கனவு திட்டம் 'டைடல் பார்க்' என்றால் தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் கனவு திட்டம் 'மினி டைடல் பார்க்' என்று கூறலாம். இந்நிலையில் இரண்டாவது மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மக்களின் வாழ்க்கை தரமும், பொருளாதாரமும் முன்னேற்றம் அடையவும், சொந்த மாவட்டத்திலேயே வேலைவாய்ப்பை உருவாக்கவும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையிலும் மினி டைடல் பார்க் அமைக்கப்பட்டு வருகிறது. அதன்படி, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் மினி டைடல் பார்க் தொடங்கப்பட்டுள்ளது. இதுதவிர, காரைக்குடி, திருப்பூர், ஈரோடு, வேலூர், கரூர், திருவண்ணாமலை, நீலகிரி, நெல்லை, குமரி, நாமக்கல், நாகை, விருதுநகர், ராமநாதபுரம், செங்கல்பட்டு ஆகிய இடங்களில் மினி டைடல் பார்க் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

பல்வேறு தொழில் துறைகளில் சிறந்து விளங்கி வரும் கோவை மாநகரம், தற்போது ஐ.டி. எனப்படும் தகவல் தொழில்நுட்பத் துறையிலும் வேகமாக முன்னேறி வருகிறது. சென்னைக்கு அடுத்தபடியாக கோவையில் அதிக அளவிலான ஐடி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக காக்னிசெண்ட், ராபர்ட் பாஷ், டி.சி.எஸ், இன்போசிஸ், புரோட்டிவிட்டி உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள் உட்பட கோவையில் தற்போது 700க்கும் மேற்பட்ட ஐடி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. மேலும் ஆண்டுதோறும் ஐடி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஊக்கம் காரணமாக, பல்வேறு முன்னணி நிறுவனங்கள் தங்களின் அலுவலகங்களை கோவையில் அமைக்க ஆர்வம் காட்டி வருகின்றன.

இதனிடையே கடந்த 2024-25 நிதியாண்டில் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்து இரண்டாம் நிலை நகரங்களில் நகரங்கள் வாரியாக நடந்த ஏற்றுமதி குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன. இதன்படி இரண்டாம் நிலை நகரங்களில் மொத்தம் ரூ.15,105.9 கோடிக்கு கோவை நகரம் ஏற்றுமதி செய்துள்ளது.

இதற்கு அடுத்து ரூ.1,905.11 கோடிகளுடன் மதுரை இரண்டாம் இடத்திலும், ரூ.899.32 கோடிகளுடன் திருச்சி மூன்றாம் இடத்திலும் உள்ளன. இதற்கு அடுத்த இடங்களில் நெல்லை (ரூ.251.91 கோடி), சேலம் (ரூ.130.60 கோடி), ஓசூர் (ரூ.15.10 கோடி) ஆகிய நகரங்கள் உள்ளன. கோவையில் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலப் பகுதிகளில் உள்ள ஐ.டி. நிறுவனங்களில் இருந்து ரூ.11 ஆயிரத்து 987 கோடிக்கு ஏற்றுமதி நடந்துள்ளது.

இதில் 28 ஆயிரத்து 621 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் விளாங்குறிச்சி எல்காட் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் இருந்து ரூ.4,671.15 கோடிக்கும், 37 ஆயிரத்து 847 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் 'கே.ஜி.ஐ.எஸ்.எல்.' சிறப்பு பொருளாதார மண்டலத்தில் இருந்து ரூ.6,972.03 கோடிக்கும், 3 ஆயிரத்து 12 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 'ஸ்பான் வென்ச்சர்ஸ்' என்ற சிறப்பு பொருளாதார மண்டலத்தில் இருந்து ரூ.443.56 கோடிக்கும் ஏற்றுமதி நடந்துள்ளது.

இதுவே மற்ற நகரங்களில் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்களில் இருந்து மதுரையில் ரூ.1,612 கோடி, திருச்சியில் ரூ.154 கோடி, சேலத்தில் ரூ.130 கோடி, ஓசூரில் ரூ.15 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்களில் கோவை ரூ.3,119 கோடிக்கும், மதுரை ரூ.292.95 கோடிக்கும், திருச்சி ரூ.745.13 கோடிக்கும், நெல்லை ரூ.195.89 கோடிக்கும் ஏற்றுமதி செய்துள்ளன. கோவையில் உள்ள மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்களில் கடந்த 5 ஆண்டுகளில் தொடர்ந்து ஏற்றுமதி அதிகரித்து வருகிறது. இப்பகுதியில் ஏற்றுமதி கடந்த 2020-21ல் ரூ.921.2 கோடியாகவும், 2021-22ல் ரூ.1,288.37 கோடியாகவும், 2022-23ல் ரூ.2,009 கோடியாகவும், 2023-24ல் 2,548.26 கோடியாகவும் இருந்த நிலையில், 2024-25ல் ரூ.3,119.16 கோடியாக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து தொழில் துறையினர் கூறுகையில், "தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பத் துறை, மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் ஒரு முக்கியத் துறையாக இருந்து வருகிறது. இந்த துறை மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதம் பங்களிக்கிறது. தமிழ்நாட்டில் திறன்வாய்ந்த தொழிலாளர்கள் இருப்பது, கல்வி நிறுவனங்களில் இருந்து ஆண்டுதோறும் அதிகளவிலான பட்டதாரிகள் வருவது மற்றும் தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டங்களால் தகவல் தொழில்நுட்பத் துறை வேகமாக முன்னேறி வருகிறது.

இதில் ஐ.டி. நிறுவனங்கள் செயல்படுவதற்கு கோவை பொருத்தமான இடமாக அமைந்துள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். மேலும் முதன்மை நகரமான சென்னை தவிர்த்த இரண்டாம் நிலை நகரங்களில் கோவை முன்னணியில் இருக்கிறது" என்றனர்.

**நன்றி: 'தினகரன்' 15.10.2025**



தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் மண்டலப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில் 14.10.2025 அன்று நடைபெற்றது. அணியின் இணைச்செயலாளர் டாக்டர் மகேந்திரன், அணியின் ஆலோசகர் கோவி.லெனின், துணைச் செயலாளர்கள், மண்டல பொறுப்பாளர் பங்கேற்ற இந்த கூட்டத்தில் கழகம் ஏழாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்க 2026 தேர்தல் களத்தில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், துணை முதலமைச்சர் இளம் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக நின்று களத்திலும் தளத்திலும் செயலாற்றுவது குறித்த ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.